ரெஜிஸ்டர் நெ. M. 3855.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 5. ஜூன், 1942 நெ. 3.

183


எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம்.எல்.ஏ.

என். சத்தியநாராயணு

எடிடர்.

ஸ்ரீமான்

வி. விப்பன்னு, பி.ஏ., பி.எல்.


---


சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

# பொருள் அடக்கம்.


1. தலையங்கம்.—

    பஞ்சாயத்து மசோதா கமிடியும் அதன் சிபார்சுகளும் ... 221

2. கிராமத்தின் சக்தியும், வரிசைக் கிரமமும் ... 224

3. வெறி பிராணிகளின் கடியும் அதன் பரிகாரமும் ... 229

4. வர்த்தமானங்களும் குறிப்புகளும் ... ... 232






கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# The Village Panchayat Journal.

VOL. V] JUNE. 1942. [No. 3.

*The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.*

---

## The Panchayat Bill Committee and its recommendations.

To judge from Press Reports, the Panchayat Bill Committee appear to have gone through their business in a fair manner. They seem to have made recommendations worthy of the cause. They desire that Adult Franchise should be the basis for future elections to the Panchayats. This is as it should be. Every adult villager has the fullest interest in the affairs of his village as any action taken on his behalf affects him as much as it affects every other. The village Panchayat election is really the election in which every citizen learns the first lessons in political life. To deny the right to vote in such an election is to deny citizenship itself. It is high time that this fundamental right is conceded without demur. There shall be no more political serfdom. True to the spirit of Indian tradition, the Committee appears to have urged that there should be compulsory formation of Panchayats in all villages the objective to be achieved within five years. We have too far advanced to delay universal formation of Panchayats. To talk of democratic forms of Government without forming the units thereof is like building palaces on sands. Be it remembered that it is in the practical life of the village that the angularities of our population have to be rubbed and the nation shaped for a full life. Discussions by top men are, at best, idle speculation as long as life in the village remains undeveloped and the mass of our masters have no mind which may be interpreted by the so called representatives. It is well that the Committee have equally realised the need for Joint Committees. They have recommended formation thereof. To us it is not clear, from the press, whether Joint Committees are sought to be enforced or whether they should be left to be formed at the will and pleasure of the Panchayats concerned. We have all along urged that there should be no delay in the universal application of the Joint Committee principle as of the Panchayat principle. To our mind, the two are inseparable parts of the same life. The individual Panchayat is generally for a single village—either revenue or declared. To

leave Panchayat life at that has two direct disadvantages. There are a very large number of amenities which a single village Panchayat cannot arrange. Medical aid, intervillage communication, higher educational facilities are a few instances. When Panchayats are being formed all over, it is meaningless to ask another administrative institution to come into the area and carry on higher and larger aspects of the activities primarily allocated to Panchayats. More than this grave disadvantage, no village should be left to feel as a separate entity standing aloof from other groups in the country. At the very threshold of national life the population should cultivate a co-operative spirit in regard to its local groups. A Joint Committee of Panchayats admirably serves this purpose. The Panchayat Bill Committee seem also to have suggested that elementary education should be taken out of the hands of the District Board and the Panchayat put in possession thereof. The funds allotted to the Panchayat for this purpose should be based on the average of the expenditure incurred by the District Board during the last three years. There should be no difficulty in this matter at all ; for, the testimony of the first Registrars General of the Panchayats is there on record that the Panchayats were most successful in the management of their Elementary Schools and Mr. Rutherford was one of those Registrars General. At this stage, may we add that Adult Education should be a charge on the Panchayats ; for, admittedly, without it, neither the franchise nor children's education will have its full value for the villager. We are told that in regard to powers of taxation the Committee has decided to recommend that the Panchayats should be empowered to levy house tax and vehicle tax compulsorily. A house in a village is, in a majority of cases, the hut of the poor tilling or labouring villager. To him, even the levy of a few annas in terms of King's money is an unbearable burden. Therefore, there should be an option to the poor man to pay up his tax by labour and spare himself the little monetary gain to keep himself going. We earnestly plead that this aspect should be carefully considered by the Government before they pass final orders as to the provisions of the Bill.

We do hope that a Panchayat Act guaranteeing full play to the political consciousness of the villager and its further unhampered development will emerge erelong. As we have already stated in these pages, we have in Mr. Rutherford a very sympathetic administrator and we do hope that he will be able, with the assistance of the Committee that has so far stood on the side of progress, to formulate a progressive act and get His Excellency the Governor's consent to it without delay. If, in the midst of the other absorbing interests of the day, he should achieve this purpose of fundamental importance, he is sure to be remembered gratefully by generations as the friend of our masses in rural areas and their future development.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

| Vol. 5 | ஜூன், 1942. | No. 3 |
|---|---|---|

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற்செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

## தலையங்கம்.

### பஞ்சாயத்து மசோதா கமிடியும் அதன் சிபார்சுகளும்.

பத்திரிகைகள் மூலமாக பஞ்சாயத்து மசோதா கமிடியானது வேலைக்கு மும்முரமாக தொடங்கி விட்டதாகத் தெரிகிறது. இயக்கத்திற்குத் தகுதியான சிபார்சுகளை செய்திருப்பதாக தெரிகிறது. பஞ்சாயத்துகளின் தேர்தல்களில் இனி வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்கவேண்டும் என்று விரும்புகிறது. இது சரியே. கிராமத்திலிருக்கும் ஒவ்வொரு வயது வந்தவனுக்கும் தன் கிராமத்தில் நிகழும் விஷயங்களில் அக்கரையுண்டு. அந்த விஷயங்களில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் அவன் உள்பட கிராமத்தில் உள்ள சகலரையும் பாதிக்கின்றன. கிராம பஞ்சாயத்து தேர்தல்களில் தான் முதல் முதலாக பிரஜைகள் ராஜ்ய விஷயங்களின் முதல் பாடத்தைக் கற்றுக் கொள்ளுகிறார்கள். இந்த தேர்தல்களுக்கு வாக்குரிமையை அளிக்க மறுத்தால், பிரஜா உரிமையையே அளிக்க மறுப்பது போலாகும். இந்த முக்கியமான உரிமையை உடனே அளிக்க வேண்டும். இனி ராஜ்ய அடிமைத் தனம் கூடாது.

இந்திய சுபாவத்திற்கு ஒப்ப, அது எல்லா கிராமங்களிலும் கட்டாயமாக பஞ்சாயத்துகள் ஏற்படவேண்டும் என்றும் அப்படி ஐந்து வருஷத்திற்குள் பூர்த்தியாக வேண்டும் என்றும் சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது. எல்லா இடங்களிலும் பஞ்சாயத்துகள் ஏற்பட்டாக வேண்டிய நிலைமை வந்து விட்டது. அடிப்படையான அம்சங்கள் ஏற்படுத்தாமல்

ஜனநாயக ஆட்சி ஸ்தாபிப்பதாகச் சொல்லுவது, மணல்மேல் கட்டடம் கட்டுவது போலாகும். கிராமங்களின் ஜனங்களின் வாழ்க்கை தவறுதலை சீர்படுத்தினால்தான் தேசத்தின் வாழ்கையை சீர்பந்தலாம். அது இல்லாத வரையில் சுகவாழ்வு வாழ்ந்து வெறும் உபதேசம் செய்து வரும் மனிதர்களின் முயற்சி பலனளிக்காது.

கூட்டுக் கமிடிகளின் அவசியத்தை உணர்ந்து, அவைகள் ஏற்பட வேண்டியதைப்பற்றி சிபார்சு செய்திருப்பதும் சரியே. பத்திரிகைகள் மூலம் கிடைக்கும் தகவல்களிலிருந்து அந்த கூட்டுக் கமிடிகள் கட்டாயமாக ஏற்படுத்தப் போகின்றனவா அல்லது அவை அந்த அந்த பஞ்சாயத்துகளின் விருப்பத்துக்குட்பட்டனவா என்பது தெளிவாகவில்லை. எல்லா இடத்திலும் பஞ்சாயத்துகளைப் போல் கூட்டுக் கமிடிகளும் தாமதமின்றி ஏற்படவேண்டும் என்று நாம் வெகு காலமாக வற்புறுத்தி வந்திருக்கிறோம். அவை இரண்டும் இணைபிரியாமல் இருக்க வேண்டியவை. தனிப்படையான பஞ்சாயத்து சாதாரண தனி ரெவினியூ கிராமத்திற்குதான். அந்த மாதிரியே பஞ்சாயத்து ஏற்பாட்டை விட்டுவிட்டால் இரண்டு நேரிடையான அசௌகர்யங்கள் ஏற்படுகின்றன. தனிப்பட்ட ஒரு பஞ்சாயத்தினால் மாத்திரம் ஏற்பட சாத்திய மில்லாத கிராம ஜனங்களின் நன்மைக்கு செய்யவேண்டிய காரியங்கள் அநேகம் இருக்கின்றன. ஆஸ்பத்திரி வசதிகள், கிராமத்திற்கு கிராமம் போக்கு வரவு சாதனங்கள், மேல்படிப்புக்கான ஏற்பாடுகள், இவை முக்கியமான சில காரியங்கள். எல்லா இடங்களிலும் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கப்படும்போது, மேற்சொன்ன விஷயங்களையும் இதர அந்த மாதிரி விஷயங்களையும் கவனிக்க வேறொரு ஸ்தாபனத்தைத் தவிற, ஒரு கிராமமாவது தேசத்தில் மற்ற ஸ்தாபனங்களின் தொடர்பற்று தனித்து நிற்க வேண்டி யிருப்பதாய் எண்ணக்கூடாது. தேச வாழ்கையின் ஆரம்பத்திலேயே ஒவ்வொரு எல்லையிலிருக்கும் ஜன சமூகம் பூராவும் ஐக்கிய உணர்ச்சி அடைய வேண்டும். பஞ்சாயத்துகளின் கூட்டுக் கமிடியானது இதற்கு மிகவும் அனுகூலமாக இருக்கிறது. பஞ்சாயத்து மசோதா கமிடியானது ஆரம்ப வாசிப்பை ஜில்லாபோர்டிடமிருந்து எடுத்து, பஞ்சாயத்தினிடம் ஒப்படைக்க வேண்டும் என்று யோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது. அதற்காக ஜில்லா போர்டானது சென்ற மூன்று வருஷங்களில் செலவழித்திருக்கிற சராசரி துகையை கணக்கெடுத்து அதற்கேற்றபடி பஞ்சாயத்துக்கு கொடுக்க வேண்டும். இது விஷயமாய் யாதொரு கஷ்டமும் நேரிட இடமில்லை. பஞ்சாயத்துகளின் முன் ரிஜிஸ்திரார் ஜெனரல்கள், பஞ்சாயத்துகள் ஆரம்ப பள்ளிக்கூடங்களை வெகு திருப்திகரமாக நடத்தினார்கள் என்று சிலாகித்து எழுதியிருக்கிறார்கள். அப்படி எழுதியவர்களில் கனம் ரூதர்போர்டும் ஒருவர். இந்த இடத்தில் நாம் வயது வந்தவர்களின் கல்வியானது பஞ்சாயத்துகளின் கடமை என்று ஏற்படவேண்டும் என குறிப்பிட விரும்புகிறோம்.

ஏனெனில் அது இல்லாமல், வாக்குரிமையாவது, குழந்தைகளின் கல்வியாவது முழு பயனை அளிக்காது. வரி விதிப்பது சம்பந்தமாக, பஞ்சாயத்துகளுக்கு கட்டாய வீட்டு வரியும், வண்டி வரியும் விதிக்க அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று சிபார்சு செய்ய கமிடி தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. கிராமத்திலிருக்கும் வீடு, அநேகமாக உழுது வேலைசெய்து பிழைக்கும் ஏழையின் குடிசைதான். அப்படிப்பட்டவன்மேல் வரியாக எவ்வளவு ஸ்வல்ப தொகை நாணயமாக விதித்தாலும், அது தாங்க முடியாத பளுவாகும். அவனுக்கு தான் செலுத்தவேண்டிய வரியை, நாணயத்திற்கு பதிலாக தன் உழைப்பினால் ஈடுசெய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அதனால் ஏற்படும் லாபத்தைக் கொண்டு அவனுக்கு பிழைக்க அனுகூலமாக இருக்கும். மசோதாவைக் குறித்து தீர்மானமான உத்தரவுகள் செய்யு முன் கவர்ன்மெண்டார் இந்த விஷயத்தை கவனமாக ஆலோசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

கூடிய சீக்கிரத்தில் கிராம ஜனங்களின் ராஜ்ய உணர்ச்சிக்கு குந்தகம் ஏற்படாமல், அதன் பூரண வளர்ச்சிக்கு இடம் கொடுக்கும் படியான ஒரு பஞ்சாயத்து சட்டம் ஏற்படும் என நம்புகிறோம். நாம் இதற்கு முன் சொல்லியிருப்பது போல், ரூதர்போர்டு துரை மிகவும் சகாயம் செய்யும் நோக்கமுடையவர். அவர், முன்னேற்றத்திற்கு பாடுபடும் கமிடியின் உதவி கொண்டு ஒரு சீரான சட்டத்தை பூர்த்திசெய்து தாமதமின்றி மே. த. கவர்னரின் அனுமதியையும் பெறுவார் என நம்புகிறோம். அவருக்கு இப்போது இருக்கும் முக்கியமான அலுவல்களின் மத்தியில், இந்த முக்கியமான விஷயத்தையும் அவர் கவனித்து பூர்த்தி செய்வாரானால் அநேக தலைமுறைகள் அவரை நன்றியுடன் நினைத்து அவர் கிராம ஜனங்களின் நன்மைக்குச் செய்த சேவைகளை பாராட்டும் என்பது திண்ணம்.

---

# கிராமத்தின் சக்தியும், வரிசைக் கிரமமும்.

---

(ஆர். காலேடி, ஐ. சி. எஸ்.)

கிராமவாசி தன் சொந்த முயற்சியாலும், சாமர்த்தியத்தாலும் அடைய வேண்டிய பலனை ஒரு சிறிய கவர்ன்மெண்டு உத்தியோக கூட்டத்தினிடம் எதிர்பார்க்கமுடியாது. புத்திசாலியான கிராமவாசியின் வழிகாட்டியாக நான் ஒரு ஜாப்தா வரிசை கிரமமும், முக்கிய கிரமும் காட்டி, நான் கீழே தயார் செய்திருக்கிறேன். கீழ் கண்ட குறிப்புகள் திருப்திகரமாக வேலை செய்யம் முறையை காண்பிக்கின்றன.

1. முதல் முதலாக கிராம கூட்டம் போடவேண்டும். சொத்து யுடைய எவரும், வரிசெலுத்துவோரும் இதில் ஆஜராகி தன் யோசனையை கூறலாம். எத்தனை பேர் முடியுமோ அவ்வளவுபேரும் ஆஜராகும்படி செய்யவேண்டும். கூட்டங்கள் அடிக்கடியும், முறையாகவும் நடைபெறவேண்டும். இரண்டு மாதத்திற்கு ஒரு முறையாவது, மாதத்திற்கொருமுறையாவது நடைபெறவேண்டும். அடுத்த கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய ஒரு நபரை நியமித்து, ஒரு அக்கிராசனரை கூட்டத்தை ஒழுங்காக நடத்த சேர்ந்தெடுக்கவேண்டும். அபிப்பிராய பேதங்கள் இருப்பது சகஜம். அவை வசைமொழியாலல்லாமல், வாதத்தினால் தீர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

2. கிராம பொதுக்கூட்டத்தில், கிராமத்திலிருக்கும் பல தேவைகளில் எது ரொம்பவும் முக்கியமானது என்று தீர்மானிக்கப்பட வேண்டும். ஒரு தடவை 3, 4, தேவைகளை கவனித்தால்போதுமானது.

அவைகளின் ஜாப்தா கீழ்குறிப்பிட்டுள்ளன : அ. து. ஜலவசதி ; நீர்பாய்ச்சல், போக்குவரத்து சாதனங்கள், கல்வி, விவசாய அபிவிருத்தி, கால் நடை அபிவிருத்தி, சுகாதாரம், வீடுகள் அபிவிருத்தி, உல்லாச வாழ்வ, வைத்தியவசதி, கால் நடைவைத்தியவசதி, சட்ட சம்பந்தமான வசதி, ஐக்கிய சங்கங்கள், தொழில் அபிவிருத்தி, காடுகள், இவைபோன்றவை.

கிராமத்தில் சிலருக்கு சிலது முக்கியமாகவும் மற்ற சிலருக்கு வேறு முக்கியமாகவும் படும். நன்றாய் விவாதித்த பின் எது முக்கியமானதேவை என்பதைக் குறித்து ஓட்டு எடுக்கப்படவேண்டும். இதை முதல் பாகத்தில் முதல் காலத்தில் ஒன்றாவது ஐடமாக குறித்துக் கொள்ளவேண்டும். அடுத்தபடியாக கவனிக்கவேண்டியதைப்பற்றி மறுபடி ஓட்டு எடுக்கவேண்டும். இந்தப்படி எல்லாவிஷயங்களையும் ஏற்பாடு செய்துக்கொள்ளவேண்டும்.

3. அடுத்தபடி மேற்படி பொறுக்கின விஷயங்களை எப்படி நிறைவேற்றுவது என்பதை கவனிக்கவேண்டும். ஏற்கனவே இருக்கும் ஸ்தாபனத்தையோ இசா விஷயத்தையோ செப்பனிட்டு விருத்திசெய்யலாம். அல்லது இன்னும் நல்ல உபயோகத்திற்கு ஏற்படுத்திக்கொள்ளலாம். அல்லது அதேமாதிரி அநேக ஸ்தாபனங்கள் தேவையாகலாம். அல்லது புது ஏற்பாடுகளே செய்யவேண்டியிருக்

கலாம். ஒவ்வொரு முக்கியமான தேவைக்கும் கிராமக்கூட்டத்தில் ஒன்று அல்லது இரண்டு நிறைவேற்றும் யோசனைகளை தீர்மானிக்கவேண்டும். உதாரணமாக, போக்குவரத்தை சீர்படுத்த, சில ரஸ்தாக்களில் இருக்கும் கல்அடைப்புகளை நீக்கி, பள்ளத்தை சரிப்படுத்தியும், அல்லது வண்டிபோகும் வழியை சீர்படுத்தி கொஞ்சம் தூரம் வரையில் கல்போட ஏற்பாடுசெய்ய விவசாயத்தை விருத்தி செய்ய, கிராம விதைபண்ணை ஏற்படுத்தவும், எருக்களை உலர்ந்த மண்ணில் ரொப்பிவைக்கும் முறையையும் அனுசரிக்க தீர்மானிக்கலாம்.

செய்யவேண்டிய இனங்களில் சிலவற்றை அடியில் ஜாப்தாவில் காண்க.

ஜலவசதி.

மூடின கிணறுகள் புதுகிணறுகள், பம்புகள், தண்ணீர் சேகரிப்படும் தொட்டிகள்.

நீர்பாய்ச்சல்.

சரியான குடிமராமத்து, ஏரிகளை சீர்படுத்துதல், புது அணைக்கட்டுகள், கால்வாய்கள் வெட்டுதல்.

சாலைகள்.

புது ரஸ்தாக்கள் போடுதல், வண்டிபோகும் வழிகளை சமப்படுத்துதல், ரஸ்தாக்களை கல் போட்டு மூடுதல், பாலம், வாராவதி கட்டுதல்.

கல்வி.

புது பள்ளிக்கூடங்கள், மேன்மையான பள்ளிக்கூடங்கள், பெற்றோர் சங்கங்கள், வயது வந்தவர்களுக்கு பள்ளிகள் : புத்தகசாலைகள்.

விவசாய அபிவிருத்தி.

தனிப்பட்ட குடியானவன் விதை சேகரித்தல், எருக்களை பத்திரப்படுத்துதல், எருக்கள், வைக்கோல் பயிர்கள், விவசாய இலாகா சிபார்சு செய்தமுறைகளும், கருவிகளும். கிராம பிரசார பண்ணை, கிராம விதைபண்ணை.

கால்நடை அபிவிருத்தி.

விரையெடுத்தல், மேன்மையான போஷிப்பு, மேன்மையான கொட்டாய்கள், மேன்மையான வண்டிகள், பிரஜாவிருத்தி.

சுகாதாரம், சாக்கடைகள், ஊறும் பள்ளங்கள், எருப் பள்ளங்கள் சரியாக அமைத்தல், மலங்களை அப்புறப்படுத்த ஏற்பாடுகள்.

வீடு அபிவிருத்தி.

நல்ல மனைகள், நல்லமாதிரி, காற்று வெளிச்சம் நன்றாய் அடைய வசதி அதிகக் கூட்டமில்லாமல் அதிக வீடுகள்.

உல்லாச நேரங்கள்.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் விளையாட்டுகள், வாசகசாலைகள், பத்திரிகைகள், சங்கங்கள்.

ஐக்கிய சங்கங்கள்.

கடன் கொடுக்க, தான்யங்களை விற்க, சாமான்கள் சேகரிக்க, விவசாய சங்கங்கள், மத்தியஸ்தம், நிலங்களை ஒன்று சேர்த்தல்.

## தொழில் அபிவிருத்தி.

நல்ல கருவிகள், நல்ல முறைகள் நல்ல மோஸ்தர்கள்.

### கால் நடை வைத்திய சகாயம்.

பிரதம சிகித்சை, கிராம கால் நடை வைத்தியரை நியமித்தல், ஊர் ஊராகப் போகும் மருந்து சாலையில் பங்கு.

### வைத்திய உதவி.

பிரதம சிகித்சை, வைத்தியரை கிராமத்தில் குடியேறும்படி தூண்டுதல் ஊர் ஊராய்ப்போகும், ரணசிகித்சை சாலையில் பங்கு.

### சட்ட உதவி.

கிராம கோர்ட்டு, வக்கீலை கிராமத்திலாவது, பிர்காவிலாவது இருக்க தூண்டுதல்.

இப்படி எத்தனையோ விதமான வேலைகள் இருக்கின்றன. ஒரு சமயத்திற்கு 6 இனங்களை கவனித்தால் போதும். இவைகளை முதல் பாகத்தில் இரண்டாவது காலத்தில் வரிசை கிரமமாக குறித்துக்கொள்ளவேண்டும்.

4. இவைகளுக்கெல்லாம் பிளான்களும் மதிப்பும் தயார் செய்யவேண்டும். கிராமக் கூட்டத்தில் ஒவ்வொரு ஐடத்தையும் கவனிக்க ஒன்று அல்லது இரண்டு நபர்களை நியமிக்கவேண்டும். பஞ்சாயத்து போர்ட்டு இருந்தால், அதின் அங்கத்தினர்கள் நியமிக்கப்படலாம். இல்லாதபக்ஷத்தில், எல்லாருடைய நம்பிக்கைக்கும் பாத்திரமான, பாடுபட்டு உழைக்கக்கூடிய மனிதர்களை நியமிக்க வேண்டும். இவர்களுடைய பெயர்களை 3-வது காலத்திலும், 4-வது காலத்தில் அந்த அந்த இலாகா உத்தியோகஸ்தர்களின் பெயர்களையும் குறித்துக் கொள்ளவேண்டும்.

5. காலகிரமத்தில், பிளானையும், மதிப்பையும் கிராமக் கூட்டத்தில், சமர்பிக்கவேண்டும். கிராம ஜனங்கள் அந்த வேலைகளை தாங்களே செய்ய முடியுமா என்று தீர்மானிக்கவேண்டும். அப்படி செய்வதுதான் நல்ல முறை. ஏனெனில் அப்போது கவர்மெண்டினுடைய சவுகரியத்திற்காக அனாவசியமாக காத்திருக்கும்படி நேரிடாது. கவர்மெண்டு சகாயம் அவசியமானால், கூட்டத்தில் என்னதொகை கொடுக்கமுடியும் என்பதையும் பூர்த்தி செய்ய என்ன சகாயம் செய்யமுடியும என்பதையும் தீர்மானித்து 5-வது காலத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

6. கிராமத்தார் தாங்களாகவே வேலையை செய்து முடிப்பதாகத் தீர்மானித்தால் உடனே இரண்டாவது பாகத்தைகவனிக்கலாம். கவர்மெண்டு சகாயம் தேவையானால் முதல் பாகத்தை தாசில்தாருக்கு அனுப்பவேண்டும், அவர் கிராம சைபீ சட்டில் இக்கமாதிரி மனுக்கள் எல்லாவற்றையும் சேர்த்து தாலூக்கா மொத்தத்தில் தேவையானவைகளை அவசரபிரகாரமும், பூர்த்தி செய்ய வசதிகளை யனுசரித்தும், ஒரு ஜாப்தா தயார் செய்வார். இது ஒவ்வொரு டிவிஷனல் அபிவிருத்தி மகா நாட்டின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

7. கிராம கூட்டத்தில் ஒரு வேலையை தானாகவோ, கவர்ன்மெண்டு சகாயத்துடனே செய்து முடிக்கலாம் என்று தோன்றும் பக்ஷத்தில் அப்படி கிராம கூட்டத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதை இரண்டாவது பாகம் முதல் காலத்தில் பதிவு செய்யவேண்டும். உடனே அதை பூர்த்தி செய்ய வேண்டிய வகைகளை,

பஞ்சாயத்து போர்டு மெம்பரானாலும் சரி, தனிப்பட்ட நபரானாலும் சரி, நியமித்து அவர்களுடைய பெயர்களை இரண்டாவது பாகம் 2 வது காலத்தில் குறிப்பிட வேண்டும்.

8. எல்லா தொகையையும் கவர்ன்மெண்டே கொடுக்க வேண்டியிருந்தாலொழிய, (அப்படி ஏற்படுவது கூடாது)—கிராமத்தில் மேற்படி தொகையையும் ஆட்களையும் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். கீழ்சொன்ன சில முறைகளை கையாளலாம்.

(a) பஞ்சாயத்து போர்டு உள்ள இடங்களில் கிராம கூட்டத்தில் பஞ்சாயத்து போர்டு வரிகள் விதிக்க சம்மதித்து, எந்த விதமான வரிகளையும் போடலாம், எவ்வளவு விதிக்கலாம் என்பதைப்பற்றி யோசனை சொல்லலாம்.

(b) எல்லா வேலைகளையும் செய்ய பணத்திற்கு பொது நன்மை பண்டுக்கு ஒரு தனிவரி விதிக்கலாம்.

(c) ஒரு தனிப்பட்ட வேலைக்கு மாத்திரம் வரி விதிக்கலாம்.

(d) நன் கொடைகள் கோரும்படி ஏஜெண்டுக்கு அதிகாரமளிக்கலாம். வரிகள் அநேக விதமாக விதிக்கலாம், சௌகர்யமான முறைகள் வருமாறு.

(a) நிலத்தீர்வையின் பேரில் நூற்றுக்கு இவ்வளவு என்று விதிப்பது.

(b) சொத்தின் மதிப்பின் மேல் நூற்றுக்கு இவ்வளவு என்று விதிப்பது. (இவை இரண்டும், பணக்காரரிடத்தில் அதிகமும் ஏழைகளிடத்தில் கொஞ்சமும் வசூலிக்கலாம்.)

(உதாரணமாக, 100 ரூபாய் வரை, 10 ரூபாய்க்கு 1 அணாவும், 1.000 வரையில் 100 க்கு 1 ரூபாயாகவும், 1,000 க்கு மேல் 1,000 க்கு 15 ரூபாயும் விதிக்கலாம்.)

(c) நஞ்சைநிலங்கள் ஏகராவுக்கு இவ்வளவு என்றும் புஞ்சை ஏகராவுக்கு இவ்வளவு என்றும் ஒரே விதமாக விதிக்கலாம்.

(d) ஒரு வீட்டுக்கு இவ்வளவு என்று விதிக்கலாம்.

(e) மாசுவில் ஒரு பாகத்தை கொடுக்க ஏற்பாடு செய்யலாம்.

தொகையின் அளவு அதை வசூலிக்கும் முறை இவைகளை மூன்றாவது பாகத்தில் 3-வது காலத்தில் குறித்துக் கொள்ளவேண்டும்.

9. ஏஜெண்டுகளை சரிவர மேல்பார்வை செய்யும்படி தூண்ட கூட்டத்தில் ஒரு கால அளவு நிர்மானிக்கப்பட்டு இரண்டாவது பாகத்தில் 4-வது காலத்தில் குறித்துக்கொள்ளவேண்டும்.

10. காணயமாய் வேலை நடக்க, கணக்கு பரிசிலனை செய்யப்பட்டு அதன் விவரத்தை கிராம கூட்டத்திற்குத் தெரியப்படுத்தவேண்டும். ஒரு படித்த கிராமத்தாரையாவது அல்லது ஒரு கவர்மெண்டு உத்தியோகஸ்தரையாவது ஏஜெண்டின் கணக்குகளை பரிசிலனை செய்யச்சொல்லி, வேலை நடைமுறையை கவனிக்கும்படி செய்யவேண்டும்.

இப்படியெல்லாம் செய்தால் கிராமத்திற்கு அநேக நன்மைகள் ஏற்பட்டு கவர்ன்மெண்டுக்கு அதிக வரி கொடுக்காமலே சௌகர்யங்களை அடைய அனுகூலமாக இருக்கும். ஊரில் கக்ஷி இருந்தால், நல்லது செய்வதில் ஒருவருக்கொருவர் போட்டியிட வேண்டும். அனாவசியமான வியாஜ்ஜியத்திலும், அடி தடியிலும் காலத்தைபோக்க கூடாது.

## கிராம வரிசை ஜாப்தா I பாகம்—திட்டம்.

கிராமம். தாலுகா.

| முக்கிய தேவை. | செய்ய முறை. | மதிப்பு தயார் செய்ய ஏஜெண்டுகள். | கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் உதவி தேவை. | கிராமத்தில் செலுத்த முடியும் வரியும் ஆட்களும். |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |

## 2வது பாகம்—நிறைவேற்றுதல்.

| கீழ்கண்ட வேலைகள் செய்ய தீர்மானம். | ஏஜெண்டுகள். | குறித்த தொகை வசூலிக்க அதிகாரம். | பூர்த்தியாக வேண்டிய தேதி. | கணக்கு பரிசீலனை செய்யவேண்டியவர்கள் பெயர். |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |

# வெறி பிராணிகளின் கடியும் அதன் பரிகாரமும்.

---

M. R. சர்மா.

வெறி என்பது, நாய், ஓநாய், நரி, முதலிய ஜந்துக்களுக்கு, காட்டிலிருந்தாலும், வீட்டில் பழகினாலும் சரி, பீடிக்கும் ஒரு நோய் அது இன்னும் ஆடு மாடுகள், குதிரை, பூனை, குரங்கு, முயல், ஒட்டை, யானை, கோழி, மனிதன், முதலிய பிராணிகளுக்கும் பிடிக்கலாம். இந்தியாவில் ஏராளமாய் தென்படும் தெரு நாய்கள் அந்த வியாதியை மற்ற ஜந்துக்களுக்கும் மனிதனுக்கும் பரவகாரணமாக இருக்கின்றன.

### நோய்க்கு காரணம்.

இது பூதக்கண்ணாடியின் உதவியினால்கூட காணமுடியாத ஒருவித கருமியால் தேகத்தில் பரவுகிறது. சூரிய வெளிச்சம், உஷ்ணம், பரிகார முறைகள் இவைகள் இதைத் தடுக்கின்றன. கிளசரைன் அதை காக்கிறது. இந்த கருமி 600 செ. உஷ்ணத்தில் அரைமணி நேரம் வைத்தாலும், அல்லது இதர போயகும் முறைகளை அனுசரித்தாலும், நசிக்கிறது.

வெறி பிடித்த பிராணி கடிப்பதால் அந்த கருமியானது கடிபட்டவுடன் சரீரத்தில் பிரவேசிக்கிறது. அதனுடைய உக்கிரம், எத்தனைதரம் கடி ஏற்பட்டது, கடிபட்ட இடத்தில் துணி மூடியிருந்ததா, மயிர் அடர்ந்திருந்ததா, என்பதை பொருந்தியது.

### நோய்களின் அடையாளங்கள்.

கடிபட்ட பிராணியின் உடலுக்குள் அந்த விஷ கருமி புகுந்த கொஞ்சம் பின்னர்தான் வியாதியின் அடையாளங்கள் தென்படுகின்றன. இதற்கு இன்குபேஷன் (Incubation) காலம் என்று பெயர். அது சாதாரணமாக நாய்களுக்கு 15 நாள் முதல் 6 மாதம் வரையிலும், பூனைகளுக்கு 15 நாள் முதல் 60 நாள் வரையிலும், குதிரைகளுக்கு 10 நாள் முதல் 45 நாள் வரையிலும், ஆடுகள், பன்றிகளுக்கு 14 நாள் முதல் 60 நாள் வரையிலும், மனிதர்களுக்கு 14 நாள் முதல் 64 நாள் வரையிலும் சொல்லலாம். இரண்டு வருஷகாலத்திற்கு கூட போன உதாரணங்கள் உண்டு. சிறிய ஜந்துக்களுக்கும், தலைக்கு சமீபம ஏற்பட்ட கடிகளுக்கும் அந்த காலங்கள் குறுகியவை.

நரம்புகளை இந்த நோய் பாதிப்பதால், நரம்பு கோளாறு முதல் அடையாளமாக தென்படுகின்றன. ஒரு சம்பவத்தில் 3 வகை அடையாளங்கள், அ. து. உத்சாக மின்மை, படபடப்பு, பாரிச வாயு, இவை தென்பட்டன. ஆனால் நாய்களுக்கு எல்லா அடையாளங்களும் தோன்றுமென்று எதிர் பார்க்கக் கூடாது. சில சமயங்களில், சிறிய வீட்டு நாய்களுக்கு படபடப்பு அடையாளங்கள் வெளிக்கு நன்றாக தெரிவதில்லை. மோவாய் கட்டையிலும், பின் அவயவங்களிலும் சீக்கிரம் பாரிச வாயு பீடிக்கிறது. பெரிய ஜாதி நாய்களுக்கும், மற்ற ஜந்துக்களுக்கும் படபடப்பு அதிகமாக சீக்கிரமே தென்பட்டு, பாரிச வாயு பின்னிட்டே தென்படுகிறது. ஆனாலும் இரண்டுக்கும் அதிகமான வித்தியாசம் இல்லை.

### மற்ற வீட்டு பிராணிகள்.

மேலே சொன்ன அடையாளங்கள் வெறி நாயால் கடிபட்ட மற்ற வீட்டுப் பிராணிகளிடத்திலும் பொதுவாகக் காணலாம். நோய்பட்ட பிராணிகள், பொதுவாக அமைதியின்மை, கட்டுக்கடங்காமை, காலை உதைத்துக் கொள்ளுவது, கத்துவது காமவெறி, நாக்கு ஜலம் சொட்டுதல், முதலிய அடையாளங்களைக் காட்டும். இதனால், அதிக பலஹீனம் ஏற்பட்டு பின்,முன் அவயவங்களுக்கு பார்சு வாயு உண்டாகிறது. சில சமயங்களில் படபடப்பு சீக்கிரம் போய், பார்சு வாயு உடனே வந்து விடுகிறது. மேற்படி அடையாளங்கள் தோன்றி ஐந்து நாட்களுக்குள் சாதாரணமாக மரணம் சேரிடுகிறது. இதே மாதிரி அடையாளங்கள் நோய்பட்ட ஆடு, வெள்ளாடு, பன்றி முதலியவைகளிடமும் காணப்படுகின்றன. மனிதனுக்கு மூன்று நிலைமைகள் தென்படுகின்றன.

முதலாவது ஒருவித மந்தம், அ.து. புண்பட்ட இடத்தை பார்த்தாலும் நோவு உண்டாவது, அவயவங்களும், நீல்களும் விரைத்து போவது. ஜுரம் அடிப்பது, தலைவலி, தண்ணீர் குடிக்க விருப்பமின்மை, போன்றவை தென்படுகிறது. தூக்கம் சரியாக வருவதில்லை. தொண்டையில் ஏதோ உருந்துவதுபோல் தென்படும். இதிலிருந்து தண்ணீரை கண்ணால் பார்த்தால் கூடா துவேஷம் உண்டாகும்படி இரண்டாவது நிலைமை உண்டாகிறது, தண்ணீரென்றாலே பயம் உண்டாகிறது. (Hydro-phobia) நாக்கு ஜலம் அதிகம் ஊறும். முன்கோபம் அதிகமாகிறது. கத்துவது, சித்த ஸ்வாதீனம் இல்லாமல் போவது, இழுப்பு முதலியவைகள் உண்டாகின்றன. சில சமயங்களில் வியாதிஸ்தர் கட்டுக்கடங்குவதில்லை. இதனால் பலஹீனம் ஏற்பட்டு மூன்றாவது நிலைமையான பார்சு வாயு வியாதி தென்படுகிறது. அப்போது சுவாசக் கஷ்டமும் ஏற்படுகிறது. இம்மாதிரி கொஞ்ச காலம் தான் இருக்கும். சீக்கிரத்திலேயே மரணம் உண்டாகிறது. 1940-ம் வருஷம் 11-வயது குழைந்தைக்கு வெறி நாய் கடித்த நோய் கண்ணால் நான் பார்த்தேன். அந்தக் குழந்தைக்கு கடித்தவுடனே பரிகார சிகிச்சை செய்தும் கூட வெறி பிடித்து நோயிக்குண்டான எல்லாவித குணமும் தென்பட்டது.

### வியாதியை கண்டு பிடிப்பது.

நாய் கடித்து புண் ஏற்பட்டதிலிருந்து வெறி நோயை கண்டுபிடிக்கலாம். வெறி பிடித்ததாக சந்தேகப்படப்படும் பிராணியை கொல்லாமல், தனியாக ஓரிடத்தில் வைத்து மேல் பார்வை பார்த்து வருவது நல்லது. இதனால் சரியானபடி வியாதியை கண்டு பிடிக்க முடிகிறது. வெறி நோய் கண்ட பிராணி அநேக நோய் கண்ட 7, 10 நாளைக்குள் இருக்கிறது. முற்றின நோயுடைய வெறி நாயை உயிருடன் அபாயம் இல்லாமல் பிடிப்பது மிக கஷ்டம். இதற்கு கௌவி பிடிக்கும் படியான ஒருவித இடிக்கியை உபயோகிக்கலாம்.

### நோயை தடுப்பதும், கட்டுப்படுத்துவதும்.

வெறி நோய் சாதாரணமாக நாய்களுக்குத்தான் ஏற்படுகிறது மற்ற பிராணிகளுக்கும், மனிதனுக்கும் நாய் கடியினால் இது ஏற்படுகிறது. தவிர, நாய் தான் வேட்டைக்குப் போகும்போது காட்டு ஓநாய்கள், நரிகள் முதலியவைகளை கடிப்பதாலும் ஏற்படுகிறது. ஆகையால் இந்த வியாதியைத் தடுக்க, நாய்களுக்கு இந்த நோய் பிடிக்காமல் தடுக்கவேண்டும். இந்தியாவிலிருந்து இந்த நோயை அடியோடு அழித்து விட சாத்தியப்படாது. ஏனென்றால் அதனுடைய விஸ்தீரணத்தின்

அதிகத்தினாலும், பலவித காட்டு ஜந்துக்களும், அனாதை நாய்களும் அதிகமாய் இருக்கின்றன.

ஆனால் கூடிய வரையில் சோம்பரவாமல் தடுக்க அனாதை நாய்களை அழித்தும், முனிசிபல் எல்லைக்குள்ளிருக்கும் நாய்களுக்காவது லைசென்சு வாங்கச் சொல்லியும், வாய் மூடியில்லாமல் நாய்கள் நடமாடக் கூடாது என்று ஏற்பாடு செய்தும் முயற்சி செய்ய வேண்டும்.

இங்கிலாந்தில் நாய்களுக்கு வாய் பூட்டு போடும்படி 1890-ம் வருஷத்தில் ஏற்பட்டது. 1892இல் வெறி நோய் 129 இருந்து 38-க்கு குறைந்தது. ஜனங்களு கோரியதின் பேரில் இந்த உத்திரவை கொஞ்சம் தளர்ச்சி செய்த தன் பயனாக 1893-இல் 93-இருந்து 1895-இல் 672 நோய் பட்டவர்கள் தொகை ஆயிற்று. 1895 வாய் பூட்டு உத்திரவை மறுபடியும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அதனால் நோய் குறைந்து 1903-1907 வருஷங்களில் ஒரு நோய் கூட இல்லை. 1933-இல் சிம்லாவில் வேலைபார்க்கும் போது தான் நாய்களுக்கு வெறி நோய் அதிகமாக பிடித்தது. உடனே வாய் பூட்டு உத்திரவு போடும்படி செய்யப்பட்டு அதனால் நல்ல பலன் ஏற்பட்டது. நாய்களுக்கு வருஷம் ஒரு முறை அதற்கு அம்மை குத்தவேண்டும்.

அழிப்பது நல்லது.

வெறி நாய்களால் கடிபட்ட எல்லா பிராணிகளையும் அழிப்பது ரொம்பவும் நல்லது.

தன் வசம் இருக்கும் பிராணிகளுக்கு வெறி நோய் கண்டால் அல்லது கண்டிருக்கக்கூடும் என்று சம்சயப்பட்டால் உடனே உள்ளூர் மாட்டு வைத்திய உத்தியோகஸ்தருக்காவது அல்லது சுகாதார உத்தியோகஸ்தருக்காவது அதை தெரியப் படுத்தவேண்டும் என்று சட்டம் ஏற்படவேண்டும் அப்படிப்பட்ட பிராணிகளின் சவங்கள் நன்ருக எரிக்கப்பட்டாவது ஆழமாக புதைக்கப்பட்டு, சுண்ணாம்பு கலந்த மண்ணால் நன்றாய் மூடப்படவேண்டும். வீட்டையும், பாத்திரங்களையும் நன்ருக சுத்தம் செய்யவேண்டும்.

அம்மை குத்துதல்.

மேலே குறிப்பிட்ட நோய் தடுக்கும் அம்மை மருந்தை குத்துவது மிகவும் முக்கியம். அதுவும் நம் தேசத்தில் மிக அவசியம். மற்ற தேசங்களில் இதனால் ஏற்பட்ட அனுகூலத்தை பார்த்தால் ஜப்பானில் சுமார் 260,000 நாய்களுக்கு அம்மை குத்தினதில் அந்த வருஷத்தில் 169-க்குத்தான் நோய் கண்டது. அம்மை குத்தாதது 5881 நாய்களுக்கு, நோய் வந்தது கடிப்பட்ட மனிதர்களுக்கு நோய் கண்ட எண்ணிக்கையும் குறைவுபட்டது. அமெரிகா தேசத்திலும் இந்த முறையினால் பலனை அடைந்திருக்கிறார்கள்.

நாய் கடித்தவர்களுக்கு ஜில்லா பிரதான ஆஸ்பத்திரியிலும் இன்னும் மற்ற பெரிய ஆஸ்பத்திரியிலும் இந்த வைத்தியம் செய்யப்படும். ஏழைகளுக்கு அங்கு போய் வைத்தியம் செய்து கொள்ள ரயில் சார்ஜும், வண்டி வாடகையும் இனமாகக் கொடுக்கப்படும். அருகிலிருக்கும் சர்க்கார் டாக்டரிடமாவது; அல்லது வேறு சர்க்கார் உத்தியோகஸ்தரிடமாவது இவ்வுதவியைப்பெற்றுக் கொள்ளலாம். வைத்தியமும் இனமாகச் செய்யப்படும்.

# வர்த்தமானங்களும் குறிப்புகளும்.

---

**தென் இந்திய குடிசை தொழில்கள் : முக்கியமான வஸ்துக்களை சேகரித்தல்.**

விளம்பரத்தினால் ஏற்படும் நன்மைகளை உத்தேசித்து, தொழிற்சாலை இலாக டைரக்டர் ஜில்லா அதிகாரிகளை அந்த அந்த இடங்களில் குறிப்பாக குடிசைத் தொழில் சாமான்களை தங்கள் உத்தியோகஸ்தர்கள் மூலம் சென்னை மத்திய தொழிற் சாலை மியூசியத்திற்கு அனுப்பும்படி தெரிவித்திருக்கிறார்.

இந்த மியூசியத்தின் விசேஷம் என்னவென்றால், எல்லா குடிசைத் தொழில் சாமான்களும், அவை செய்யப்பட்ட இடம், மதிப்பு முதலிய வியாபாரத்திற் கேற்ற விவரங்களுடன் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

இந்த நோக்கத்தை விருத்திசெய்யும்படி குடிசைத் தொழில்களில் அக்கறையுள்ளவர்கள், பஞ்சாயத்துகள் உள்பட, எல்லாரும் எல்லாவிதத்திலும் செய்வது நலம்.

* * *

**பொம்மைகளும் விளையாட்டு சாமான்கள் செய்யபயிற்சி.**

நம் மாகாணத்தில் பொம்மைகள், விளையாட்டு சாமான் கைத்தொழில்கள் விருத்தியடைய, தச்சுவேலை சொல்லித் தரப்படும் தொழில் பள்ளிகளில், பல தினுசு அன்னிய நாட்டு விளையாட்டு சாமான்களை மாதிரிக்காக தருவித்து கொடுக்கும்படி கவர்மெண்டுக்கு ஆலோசனை கூறப்பட்டது.

கள்ளிக்கோட்டை தொழில் பள்ளிக்கூடத்தில் இந்த விஷயமாக ஆரம்பிக்கப்பட்ட முயற்சி திருப்திகரமான பலனை அளித்து, செய்யப்பட்ட சாமான்களுக்கு நல்ல கிராக்கி இருந்ததால், மதுரை தொழில் பள்ளிக்கூடத்திலும் ஒரு விளையாட்டு சாமான் செய்யும் வகுப்பு ஆரம்பிக்க தொழில் இலாகா டைரக்டர் உத்தேசித்து, அதில் முதன்மையான பையன்களை தாங்களாகவே சாமான்களைச் செய்யும்படி ஏற்பாடுசெய்ய உத்தேசித்திருக்கிறார். கவர்மெண்டு இந்த யோசனையை ஒப்புக்கொண்டு 1942-43 வருஷ பள்ளிக்கூட ஆரம்பத்தில் இந்த புதிய வகுப்பை ஏற்படுத்தப் போகிறார்கள்.

* * *

**கலப்பு நெய் கண்டுபிடிக்க ஆராய்ச்சி.**

கலப்புற்ற நெயினால் ஏற்படும் அதிக அபாயம் காரணமாக, விவசாய ஆராய்ச்சி சபை பெங்களூர் பால் பண்ணையில் கலப்பு நெய்யை கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்ய தீர்மானித்திருக்கிறது.

(Indian Information May 1942)

* * *

**ஆகார தான்யங்கள் அதிகருப்பு பிரசாரம் (என். ஆர். சர்க்கார்.)**

சாதாரண காலங்களில் இந்தியா, அரிசயைத்தவிற மற்ற ஆகார தான்யங்களில் தனக்குத் தேவையானதை உற்பத்திசெய்துக் கொள்ளுகிறது. அரிசி மாத்திரம்

வருஷத்திற்கு 14 லக்ஷம் டன், அ. து. அரிசி உற்பத்தியில் 100 க்கு 5 பங்கும் ஆகாரதான்ய உற்பத்தியில் 100 க்கு 2, 3 பங்கும், பர்மாவிலிருந்து தருவிக்கிறது.

ஆனால் ஆகாரதான்ய உற்பத்தி விஷயமாய் இந்தியா இப்போது இருக்கும் நிலைமை வேறு. இந்த மாறுதலுக்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் உண்டு.

(1) வெளிநாட்டு சரக்குகள் வராமலிருப்பது ;

(2) உள்நாட்டு போக்குவரத்து சாதனங்களில் தடை யேற்பட்டிருப்பது, நமது நான்கு முக்கிய ஆகார தான்யங்கள் விஷயமாய் நான் தெரிவிக்கிறேன். அதிலிருந்து நமக்கு தற்சமயம் ஏற்படப்போகும் ஆகார தான்ய பஞ்சத்தின் நிலைமையைப்பற்றி உங்களுக்கு தெரிந்துக் கொள்ள அனுகூலமாக இருக்கும்.

முதல் முதலாக இந்தியாவில் முக்கியமாய் எங்கும் விளையும் அரிசியைப்பற்றி கவனிப்போம். இந்தியாவில் சராசரி அரிசி உற்பத்தி 265 லக்ஷம் டன் ஆனால் இது உள்நாட்டு தேவைக்கு பூரா போதவில்லை. பர்மா விலிருந்து வருஷத்திற்கு 14 லக்ஷம் டன் வரவேண்டியிருக்கிறது.

நடக்கும் வருஷத்தில் நெல் பயிர் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. வங்காளத்திலும், சென்னையிலும் சாதாரண காலத்தைவிட அதிகம் பயிர் ஆகியும்கூட, உள் நாட்டில் 9 லக்ஷம் டன் பயிர் குறைந்திருக்கிறது, இந்தக் குறைவினாலும், பர்மா அரிசி நின்றுவிட்டதாலும், சுமார் 23 லக்ஷம் டன் அரிசி தேவைக்கு குறைச்சலாக இருக்கும், இன்னும் எதிர்பாராத சம்பவங்கள் நேரிடலாம், ராணுவ தேவைக்காக இல்லாவிட்டாலும், இது காணும் பர்மா அரிசியையே நம்பியிருந்த லங்கை தீவுக்கு உணவுதேவை.

கோதுமை விஷயமும் திருப்திகாமாக இல்லை. சாதாரணமாய் இந்தியாவில் 100 லக்ஷம் டன்களுக்கு மேல் கோதுமை உற்பத்தியாகிறது. அதில் பஞ்சாப் மாத்திரம் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் உற்பத்தி செய்கிறது. இத்துடன் மத்திய இந்தியா, சிந்து, மத்திய மாகாணங்கள் ஐக்கிய மாகாணங்கள் இவைகளில் உற்பத்தியாகும் கோதுமையுடன் சேர்ந்தால் சுமார் 9.11 லக்ஷம் டன் தேவைக்குமேல் கிடைக்கும். மற்ற மாகாணங்களை விட பஞ்சாப் மாத்திரம் தேவைக்குக்குறைவான 7.31 லக்ஷம் டன்னுக்கு 5.45 லக்ஷம் டன் கோதுமையும், கோதுமை மாவும் ஈடுசெய்கிறது. சாதாரண காலங்களில் இந்தியாவிலிருந்து வெளியே அனுப்பவும் இதர தேவைகளுக்கும்கூட கோதுமை கிடைக்கும்.

(Indian Information May 1942)

* * *

ஐக்கிய மாகாண. மத்தியமாகாண நிலைமை.

நடக்கும் வருஷத்தில் நிலைமை கொஞ்சம் பின்னடைந்திருக்கிறது. உற்பத்தி 99 லக்ஷம் டன்கள்தான். ஐக்கியமாகாணமும், மத்திய மாகாணமும் தேவைக்கு மேல் உற்பத்தி செய்தது போக இப்போது தேவைக்கு குறைவாகத்தான் கிடைக்கும். ஆனால் பஞ்சாபில் மாமூல்படி உற்பத்தியாகும் என்று சந்தோஷத்துடன் அறிகிறேன். சிந்து, மத்திய இந்தியா, பீகார், இவைகளிலிருந்து முறையே 136,000 86,000 39,000 டன்கள் தேவைக்கு அதிகம் இருக்கும். இப்போது இருக்கும் தகவல்களிலிருந்து, எல்லா அசாதாரண நிலைமையையும் எதிர் பார்த்தும், சுமார் 3.5 லக்ஷம் டன்கள் தேவைக்கு குறைவுபடலாம் என்று தோன்றுகிறது.

அரிசி, கோதுமைப்போல், ஜோவர் பஜ்ர்ரா இப்போது அவ்வளவு மோசமில்லே. அது இந்தியாவில் சாதாரணமாக 92 லக்ஷம் டன் கிடைக்கும், தேவைக்கு மிஞ்சி உற்பத்தியாகும், ஐக்கியமாகாணம், மத்திய இந்தியா, சிந்துமை ஆர், ஹைதராபாத் இவைகளிலிருந்து 1,89 லக்ஷம் டன்கள் கிடைக்கின்றன, அவை குறைவு படும் 1.54 லக்ஷம் டன்களுக்கு ஈடு செய்கின்றன. இந்தியாவில் இதில் ஸ்வல்ப அதிகம் இருக்கிறது.

* * *

மாமூலுக்கு ரொம்பகுறைவில்லே.

கடைசியாக கிடைத்த தகவல்களிலிருந்து சில முக்கியமான பாகங்களில் நிலமை திருப்திகரமாக இல்லே என்று தெரிகிறது. உதாரணமாக, மத்தியமாகாணத்தில் 1 லக்ஷம் டன்னும், பீகாரில், ½ லக்ஷம் டன்னும் ஹைதராபாத்சில் 2½ லக்ஷம் டன்னும் குறைவுபடுவதாகதெரிகிறது. ஆனல் இதற்கு பதிலாக பஞ்சாபில் ½ லக்ஷம் டன்னும், ஐக்கியமாகாணத்தில் 75,000 டன்னும், அதிகப்படி கிடைப்பதால், மொத்தத்தில் இந்தியாவின் உற்பத்தி இவ்வருஷம் மாமூலுக்கு ரொம்பவும் குறைவு படாது.

பொட்டு விஷயமும் இது போலத்தான், சாதாரணமாக இது 35 ½ லக்ஷம் டன்கள் கிடைக்கும், ஐக்கியமாகாணத்தில் முக்கியமாகவும். பஞ்சாபிலிம், பீகாரிலும் கிடைக்கிறது. மொத்த தேவை 2.97 லக்ஷம் டன்கள். அதற்கு கிடைப்பது 3.01 லக்ஷம் டன்கல், சென்னே, பம்பாய், வங்காளம் இவைகளில் தான் தேவக்கு குறைவாக உற்பத்தியாகிறது.

இந்த பயிர் .விஷயமாய் பம்பாய், பீகார், பஞ்சாப் மாகாணங்களிலிருந்து, கிடைத்திருக்கும் தகவல் களிலுருந்து, மாமூல்படி உற்பத்யாயிருப்பதாகத் தெரிகிறது. மற்ற மாகாணங்களி லிருந்தும், எதிர் பாராத குறைவு ஏற்பட்டதாகத் தெரியவில்லே, கையால் இது விஷயத்தில் எப்போதும் போல் தான்யக் குறைவு இருக்காது.

# மதராஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

தலைமை ஆபீஸ்.

லைஞ பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

சைதாபேட்டை பிராஞ்சு :

38, காரிணீஸ்வரர் கோயில் தெருவு, சைதாப்பேட்டை.

பிரசிடெண்டு :

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி.

லெக்ரடேரி :

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதராஸ் கார்பரேஷனுக்கும், மதராஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிஸிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும் :

லெக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

---

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. வியயன்ன, பி.ஏ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதராஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும்
சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது

# ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதராஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடெண்ட்.)

---

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகாப்பளிப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பாலிஸி தொகை | — | **1,30,00,000.** |
| க்ஷேமநிதி | — | **10,00,000.** |

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

**வி. வெங்கடாசலம்,** எம். ஏ., பி. எல்.,
காரியதரிசி.